**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 09.06.2026**

**OS.240/2023**

**பி.வா.சா.1 திரு. அரங்கண்ணல்**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A, B.Ed, Mphill படித்துள்ளேன். நான் அரசுப்பள்ளியில் ஆசிரியராக பணிசெய்கிறேன் என்றால் சரிதான். நான் எத்தனை வருடமாக நான் பணியில் உள்ளேன் என்றால் 20 வருடமாக. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் அரூர் திரு.வி.க நகரில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் என் கையெழுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்னுடைய கையெழுத்தா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை.

2. இதே நீதிமன்றத்தில் என்மீது OS.No.245/2023 என்ற வழக்கு ஆறுமுகம் என்பவர் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது சாட்சியத்தில் எனது நண்பர் ஈட்டியம்பட்டி கிராமத்திதை சேர்ந்த சக்திவேல் என்பவர் ராஜேஸ் என்பவர் மூலம் ரூபாய் 2 இலட்சம் கடன் பெற்று அதில் ரூபாய் 1 இலட்சம் திருப்பி கொடுத்துவிட்டேன் மீதி ரூபாய் 1 இலட்சத்திற்கு சக்திவேல் என்பவரிடம் புரோநோட் எழுதி வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் இதே சங்கதியை தான் OS.No.245/2023 வழக்கிலும் நான் சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் நன்கு படித்தவர் அரசு ஆசியராக உள்ளேன், புரோநோட்டில் கடன் பெற்றதற்காக கையெழுத்து போடுவதும் அதில் சாட்சி கையெழுத்து போடுவதற்கும் உள்ள வித்யாசம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு புரோநோட் வா.சா.ஆ.1ல் கடன் பெற்றுக்கொண்டுதான் ரெவென்யூ ஸ்டாம்ப்

மீதும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் என்னிடம் காட்டுவது போல ஒரு புரோநோட்டில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை.

3. எனக்கு வழக்கறிஞர் மூலம் வாதி தரப்பில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு வாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளும்போது நான் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையெழுத்து செய்து தான் அந்த அறிவிப்பை பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் நான் கையெழுத்து செய்துதான் வாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றேன் என்றால் இல்லை. நான் தற்போது ஆசிரியராக வேலை பார்க்கும் சட்டையம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் எந்த ஆண்டில் இருந்து வேலை பார்க்கிறேன் என்றால் 2023ல் இருந்து இன்றுவரை அங்குதான் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் வாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பை சட்டையம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் வேலை பார்க்கும்போதுதான் பெற்றேன் என்றால் சரிதான், நான் சந்தப்பட்டியில் வேலை பார்க்கும்போது ஆறுமுகம் அனுப்பிய அறிவிப்பையும் பெற்றேன்.

4. நான் வாதியிடம் ரூபாய் 2 இலட்சம் கடன்பெற்றுக்கொண்டு அதனை திருப்பி கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில்தான் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றும், இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் என்னுடைய கையெழுத்தையே அது என்னுடையது இல்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டும் ஆனால் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் எனது வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு கொடுத்துள்ள வாக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது இல்லை. நான் வாதியை ஏமாற்றும் நோக்கில்தான் நான் போட்ட

வாக்காலத்தில் உள்ள கையெழுத்தை என்னுடையைது இல்லை என்று மறுத்தும், அதேபோல வாதியிடம் கடன்பெறும்போது புரோநோட்டில் செய்த கையெழுத்தையும் மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்தும் வக்காலத்து, பதிலுரையில் உள்ள கையெழுத்து ஒரே கையெழுத்துதான், நான் வாதிகோரியுள்ளபடி ரூபாய் 2 இலட்சம் வட்டியுடன் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.09 17:21:07 +0530